# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnercmail@gmail.com Web site : www. tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 42 / 2016**

திரு. N. அனந்தசயனம், M.A., B.L.,
அட்வகேட்,
தேனூர்,
சமயநல்லூர் (வழி) ,
மதுரை மாவட்டம் – 625 402. மேல் முறையீட்டாளர்
(திரு. N. அனந்த சயனம், வழக்கறிஞர்)

எதிர்

செயற்பொறியாளர் / பகிர்மானம்,
சமயநல்லூர்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மின்வாரிய வளாகம்,
திண்டுக்கல் மெயின் ரோடு, சமயநல்லூர் – 625 402. எதிர்மனுதாரர்
(திரு. S.K. சிவக்குமார், உதவி செயற்பொறியாளர்/சமயநல்லூர் )

**கேட்புரை நாள்: 4–8–2016 & 21.9.2016**

**ஆணை நாள் : 28–9–2016**

திரு. N. அனந்த சயனம், வழக்கறிஞர், தேனூர், சமயநல்லூர் அவர்களின் 10.5.2016 நாளிட்ட மனு மேல் முறையீட்டு மனு எண் 42/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 4.8.2016 & 21.9.2016 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :**

மேல்முறையீட்டாளரின், மனுவை ஏற்றுக்கொண்டு மதுரை மின் பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் முறையீட்டு எண்.6/2016 நாள் 13.4.2016 ஏற்பட்ட உத்தரவை ரத்து செய்து மேல்முறையீட்டாளருக்கு ஆதரவாக தகுந்த உத்தரவை பிறக்குமாறு மேல்முறையீட்டாளர் தரப்பில் பிரார்த்திக்கப்படுகிறது.

**2. வழக்கின் சுருக்கம்:**

2.1 தேனூர் கிராமத்தில் 300 வருட பழமையான கோவிலுக்கு செல்லும் பாதையில் எதிர்மனுதாரர் டிரான்ஸ்பார்மர் அமைக்கும் இடம் இருப்பதாலும், தேனூர் வந்து மதுரை செல்லும் பஸ் திரும்பும் இடத்தில் உள்ளதாலும் மற்றும் மிக அருகில் தேனூர் ஊரராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி இருப்பதாலும் பொதுமக்கள் பள்ளிக் குழந்தைகள் நலம் கருதி டிரான்ஸ்பார்மர் அமைக்கும் இடத்தை வேறு இடத்திற்கு மாற்றும்படி மதுரை மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மேல்முறையீட்டாளர் மனு செய்துள்ளார்.

2.2 13.4.2016 நாளிட்ட ஆணையில் மன்றம் மனுதாரரின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது. மேற்கண்ட ஆணையின் மீது அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளருக்கு முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

**3. மன்றத்தின் தீர்வு**

மதுரை மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், தன்னுடைய தீர்வை 13.4.2016 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த தீர்வின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

" *மன்றத்தின் தீர்வு :-*

*முறையீட்டாளரும் மற்றும் எதிர் மனுதாரரும் மன்றத்தின் கேட்புரையில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின் அடிப்படையில் மின்மாற்றி அமைக்கப்படும் இடம் போக்குவரத்துக்கும் பள்ளிக் குழந்தைகளுக்கும் இடையூறு இல்லாத இடத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. மேலும்,*

*கோவிலுக்கும், மின்மாற்றி அமைக்கப்படும் இடத்திற்கும் போதிய இடைவெளி உள்ளதால் பொதுமக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை என்பதாலும் மற்றும் மின்மாற்றி அமைக்கப்படும் இடம் கோவிலுக்கு சொந்தமானது இல்லை. எனவே, இம்மன்றத்தில் எதிர்மனுதாரர் எடுத்துரைத்த பதிலுரையினை இம்மன்றம் ஏற்றுக் கொண்டு முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.''*

4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்</u> :–

4.1 மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான கோவில் மிகவும் பழமை வாய்ந்த கோவில் ஆகும். அதன் ஒருபுறம் பிள்ளையார் சிலை பீடமும் மறுபக்கத்தில் அம்மன் சிலையும் உள்ளது. பிள்ளையார் சிலை உள்ள இடத்தில் உயரமான பட்டியல் அமைத்த பீடமும் அம்மன் சிலை உள்ள இடத்தில் கருங்கல் கட்டிடத்தினால் அமைந்த பீடமும் உள்ளது. மேற்படி கோவிலுக்கு செல்ல கிழக்கு, தெற்கு வடக்கு திசைகளில் வழி கிடையாது. மேற்கு பக்கம் மட்டும்தான் எதிர்மனுதாரர் டிரரான்ஸ்பார்மர் அமைக்க உள்ள இடத்தின் வழியாக மட்டும்தான் கோவிலுக்கு வர முடியும்.

4.2 தேனூர் வழியாக ஆற்றுப்பக்கம் சென்று பஸ் செல்வதற்கு சுமார் 5 வருடங்களுக்கு முன்பாக ரோடு போட்ட பிறகு கோவில் இடம் மிகவும் பள்ளமாக ஆகிவிட்டது. பஸ் செல்லும் ரோட்டுக்கும், கோவிலுக்கும் இடையில் பள்ளமாக இருந்ததால் அந்த இடத்தை சமப்படுத்தி மேடாக்க சுமார் ரூ.5000/– வரை செலவு செய்து செங்கல் துகள் மற்றும் மணல் அடித்து கோவிலுக்கு செல்ல பாதை அமைத்தோம். அந்த இடத்தில் தான் எதிர்மனுதாரர் மின்மாற்றி அமைக்க தற்பொழுது ஏற்பாடு செய்து வருகிறார்.

4.3 மின்மாற்றி அமைக்கும் இடம் கோவிலுக்கு சொந்தமானதல்ல என எதிர்மனுதாரர் சொல்வது தவறு. தேனூர் –2 பிட் கிராமம் சர்வே எண்.242/9ன் படி (பழைய சர்வே எண்.179/1 1.23.00 ஏர்ஸ் இடம் (சுமார் 3 செண்டு) கோவிலுக்கு சொந்தமான இடம் என தேனூர் கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் சான்று வழங்கியுள்ளார். அதற்கான கிராம கணக்கில் உள்ள கோவில் வரைபடத்தின் நகலையும் சான்றாக கொடுத்துள்ளார். மேற்படி கோவில் இடத்தில் தான் எதிர்மனுதாரர் மின்மாற்றி அமைக்கும் இடம் உள்ளது.

4.4 மின்மாற்றி அமைக்கும் இடத்தை மாற்றி அமைக்க மேல்முறையீட்டாளர் மற்றும் பொதுமக்கள் சார்பாக (1) ஊராட்சிமன்ற தலைவர் அவர்கள், தேனூர் (2) உதவி பொறியாளர் அவர்கள், TNEB, சமயநல்லூர் (3) மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மதுரை மாவட்டம் ஆகியோர்களுக்கு மனு கொடுத்து அதன் மூலமாக ஊராட்சி மன்றத்தலைவர் தேனூர் அவர்கள் மின்மாற்றி அமைக்க பக்கத்தில் இடையூறு இல்லாத பல இடங்களை காண்பித்தும் அதை எதிர்மனுதாரர் கேட்க மறுத்துவிட்டார்.

4.5 எனவே ஊரராட்சி மன்றத்தலைவர், தேனூர் அவர்கள் தேனூர் ஊரராட்சி மன்றத்தில் தேனூர் பால்பண்னை பஸ் ஸ்டாப்அருகே மின்மாற்றி அமைக்கும் இடத்தை வேறு இடத்தில் மாற்றி அமைக்கும்படி கோரிக்கை வைத்து மன்ற உறுப்பினர்கள் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றி மின்மாற்றி அமைக்கும் இடத்தை மாற்றியமைக்க எதிர்மனுதாரரை கேட்டுக் கொண்டுள்ளார்

4.6 எதிர்மனுதாரர் கூறுவது போல் தேனூர் பால்பண்ணை பஸ் ஸ்டாப் அருகே மின்மாற்றி அமைத்திட ஏற்கனவே பணி செய்தபோது முறையீட்டாளர் கோவிலை மறைக்கிறது என தெரிவித்தார் என்றும் பின்னர் அந்த இடத்தை விட்டு அதன் அருகில் தற்போது வேலை செய்திட மின்கம்பங்கள் எல்லாம் அமைத்துவிட்ட பிறகு தற்போது எதிர்ப்பு தெரிவிக்கிறார் என்று சொல்வது தவறாகும். முதலில் தேனூர் பால்பண்ணை பஸ் ஸ்டாப் அருகே மின்மாற்றி அமைத்திட பணி செய்த அதே இடத்தில் தான் மறுபடியும் மின்மாற்றி அமைக்க எதிர்மனுதாரர் மின்கம்பங்கள் அமைத்துள்ளார். பக்கத்து பக்கத்து இடங்களில் பணி செய்ததாக சொல்வது தவறாகும். ஒரே இடத்தில் தான் மின்மாற்றி அமைக்க வேலை செய்து விட்டு உடனடியாக மின்கம்பங்கள் அமைத்துவிட்டு அதை சரி செய்ய இரண்டு இடங்களில் வேலை செய்ததாக எதிர்மனுதாரர் கூறுகிறார். முறையீட்டாளர் மேல் அதிருப்தி ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இவ்வாறு கூறுவது சரியல்ல.

**5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்:-</u>**

5.1 மேல்முறையீட்டாளர் பழமையான கோவிலுக்கு செல்ல கிழக்கு, தெற்கு, வடக்கு திசைகளில் வழி கிடையாது எனவும், மேற்கு பக்கம் வரமுடியும், டிரான்ஸ்பார்மர் அமைக்க உள்ள இடத்தின் வழியாக மட்டும்தான் கோவிலுக்கு வரமுடியும் என தெரிவித்துள்ளார். ஆனால், மேற்படி இடத்தை நேரடி கள ஆய்வு செய்த போது மேற்கு திசை தவிர மேலும் ஒரு பொது பாதை மற்ற திசைகள் உள்ளது. மேலும், மேற்கு திசையில் மின்மாற்றி அமைக்கப்பட்டாலும் கோவிலுக்கு செல்வதற்கு எந்தவிதமான இடையூறும் ஏற்படாது.

5.2 மேல்முறையீட்டாளர் ரோட்டுக்கும், கோவிலுக்கும் இடையில் பள்ளமாக இருந்ததால் அந்த இடத்தை சமப்படுத்தி மேடாக்க சுமார் ரூ.5000/– வரை செலவு செய்ததாகவும், அந்த இடத்தில் தான் மின்மாற்றி அமைக்க ஏற்பாடு செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால், கள ஆய்வில் தனிநபர் யாரும் செலவு செய்ததாக தெரியவில்லை. மின்மாற்றி அமைய இருக்கும் இடம் அரசுக்கு சொந்தமானதாகும்.

5.3 மேல்முறையீட்டாளர் மின்மாற்றி அமைக்கும் இடம் கோவிலுக்கு சொந்தமான இடம் எனவும், அது புல எண்.242/9, தேனூர்–2 பிட் கிராமத்தில் 1.23.00 ஏர்ஸ் இடத்தில் அமைந்துள்ளதாக தெரிவித்துள்ளார். மின்மாற்றியானது கோவிலுக்கு முன்புறமுள்ள அரசுக்கு சொந்தமான பொதுப்பாதையில் மட்டுமே அமைய இருக்கிறது என்ற விபரம் தெரிவிக்கப் படுகிறது.

5.4 மின்மாற்றி அமைக்க இருக்கும் இடத்தை மாற்றி அமைக்க மேல்முறையீட்டாளர் மற்றும் பொதுமக்கள் சார்பாக ஊராட்சி மன்ற தலைவர், உதவிப் பொறியாளர்/சமயநல்லூர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர்களுக்கு மனு கொடுத்து அதன் மூலமாக ஊராட்சி மன்ற தலைவர், தேனூர் அவர்கள் மின்மாற்றி அமைக்க பக்கத்தில் இடையூறு இல்லாத பல இடங்களை காண்பித்து அதை கேட்க மறுத்துவிட்டதாகவும் தெரிவித்து உள்ளார். புதிய மின்மாற்றி அமைக்க இருக்கும் இடம் தொடர்பாக பொது மக்களிடம் இருந்தோ, ஊராட்சி மன்ற

தலைவரிடம் தேனூர் அவர்களிடமிருந்தோ மாவட்ட ஆட்சித்தலைவர் மதுரை அவர்களிடம் இருந்தோ எந்தவிதமான ஆட்சேபனை மனுவும் பெறப்படவில்லை.

5.5 ஊராட்சி மன்ற தலைவர், தேனூர் அவர்கள் தேனூர் ஊராட்சி மன்றத்தில் மின்மாற்றி அமைக்கும் இடத்தை வேறு இடத்தில் மாற்றி அமைக்கப்பட கோரி தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாக தெரிவித்துள்ளார். ஆனால், இதுதொடர்பாக ஊராட்சிமன்ற தலைவர், தேனூர் அவர்களிடம் இருந்து தீர்மான நகல் ஏதும் பிரிவு அலுவலகத்தில் பெறப்படவில்லை.

5.6 மின்மாற்றி அமைத்திட பணிகள் செய்த போது கோயிலை மறைக்கிறது என தெரிவித்தார் எனவும் பின்னர் அந்த இடத்தை விட்டு அதன் அருகில் வேலை செய்திட தற்போது எதிர்ப்பு தெரிவிக்கிறார் என்று கூறுவது தவறு என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். ஆனால், மின்மாற்றி அமைக்கப்படவேண்டிய மின்கம்பங்கள் ஒப்புதல் பெறப்பட்ட இடத்தில் கோயிலுக்கோ பொது மக்களுக்கோ எந்தவிதமான இடையூறோ இல்லாத வகையில் தான் அமைக்கப்பட்டு வருகிறது என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

## 6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

6.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரர்களும், தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 4.8.2016 மற்றும் 21.9.2016 ஆகிய நாட்களில் கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் திரு N. அனந்த சயனம், வழக்கறிஞர் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில், திரு. S.K. சிவக்குமார், உதவி செயற்பொறியாளர் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

7. <u>மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 மேல்முறையீட்டாளர் திரு. N. அனந்த சயனம் வழக்கறிஞர் அவர்கள் மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 தேனூர் கிராமத்தில் 300 வருட பழமையான கோவிலுக்கு செல்லும் பாதையில் டிரான்ஸ்பார்மர் அமைக்கும் இடம் இருப்பதால் அதை வேறு இடத்திற்கு மாற்றி அமைக்க வேண்டும் என்று வாதிட்டார்.

7.3 மேலும், தேனூர் ஊராட்சி மன்றம் 17.2.2016 நாளிட்ட தீர்மானத்தில் கோவிலுக்கு செல்லும் பாதையில் டிரான்ஸ்பார்மர் அமைப்பதை ஆட்சேபித்து தீர்மானம் செய்துள்ளது என்று தெரிவித்து அந்த தீர்மான நகலையும் அளித்தார்.

7.4 மேலும், மதுரை மேற்கு ஊராட்சி நடுநிலைப்பள்ளி தேனூரின் தலைமை ஆசிரியை அவர்களும் அவரது பள்ளிக்கு செல்லும் வழியில் டிரான்ஸ்பார்மர் அமைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கபடுவதால் அதனை வேறு இடத்திற்கு மாற்றி அமைக்க வேண்டும் என்று 20.7.2016 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார் என்று வாதிட்டு அந்த அசல் கடிதத்தையும் சமர்ப்பித்துள்ளார்.

7.5 மேலும், எதிர்மனுதாரர் டிரான்ஸ்பார்மர் அமைக்க தீர்மானிக்கப்பட்ட இடம் மின்பளுமையம் என்பதால் டிரான்ஸ்பார்மர் அமைப்பதற்காக நடப்பட்டுள்ள கம்பங்களில் ஒரு கம்பத்தை மட்டும் மாற்றி அடுத்த கம்பத்திற்கு தெற்கு புறமாக அமைத்தால் கோவிலின் வழி பாதிக்கப்படாது என்றும் , எனவே, அவ்வாறு மாற்றி அமைப்பது தனக்கு சம்மதம் என்று தெரிவித்தார்.

8. <u>எதிர்மனுதாரரின் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள் : -</u>

8.1 எதிர்மனுதாரர் சார்பில் கேட்புரையில் கலந்துகொண்ட திரு. S.K. சிவக்குமார், உதவி செயற்பொறியாளர்/சமயநல்லூர் அவர்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 மேல்முறையீட்டாளரின் பழமையான கோவிலுக்கு செல்வதற்கு தற்பொழுது டிரான்ஸ்பார்மர் அமைக்க முடிவு செய்துள்ள மேற்குபுறம் தவிர வேறு பொதுப்பாதைகளும் உள்ளது. எனவே, கோவிலின் பாதையில் இடையூறு இல்லை என்று வாதிட்டார்.

8.3 மேற்கண்ட டிரான்ஸ்பார்மர் அமைக்க இருக்கும் இடம்தான் மின்பளுமையம் (load centre) என்றும் வாதிட்டார்.

8.4 மின்சார டிரான்ஸ்பார்மர் அமைப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இடம், கோவிலுக்கு சொந்தமானது அல்ல, அது அரசுக்கு சொந்தமானது. எனவே, கோவிலின் நிலத்தில் மின்சார டிரான்ஸ்பார்மர் அமைக்ககூடாது என்ற வாதம் தவறானது என்று வாதிட்டார். மேலும், தேனூர், கிராம நிர்வாக அதிகாரி கம்பம் நடுவதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இடம் வருவாய் கிராம கணக்கில் நத்தம் புல எண்.189/8c2A–ல் 0.14.68.0 சதுர மீட்டரில் உள்ள காலியிடம் அது கோவிலுக்கு பாத்தியப்பட்ட இடமில்லை நத்தம் புறம்புகலில் உள்ள காலி இடம் என்று 12.8.2016ல் சான்று அளித்துள்ளார் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

8.5 உதவி செயற்பொறியாளர் இரண்டு கம்பங்கள் மட்டும்தான் நிறுவப்பட்டுள்ளன என்றும் வேறு வேலைகள் நடைபெறவில்லை என்றும் தெரிவித்தார்.

8.6 உதவி செயற்பொறியாளர், நடப்பட்டுள்ள இரண்டு கம்பங்களில் வடக்கு புறமாக உள்ள கம்பத்தை மட்டும் தெற்கு புறம் உள்ள கம்பத்திற்கு தெற்கில் அமைக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

## 9. <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு :-</u>

9.1 இருதரப்பு வாதங்களையும் சமர்ப்பித்த ஆவணங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது தேனூர் ஊராட்சி மன்றத்தின் தீர்மானத்தின்படி 300 ஆண்டு பழமை வாய்ந்த கோவிலுக்கு செல்லும் பாதையில் டிரான்ஸ்பார்மர் அமைப்பதை ஆட்சேபித்து வேறு இடத்தில் அமைக்க கோரப்பட்டுள்ளது என்று தெரிகிறது.

9.2 எதிர்மனுதாரர் சார்பில் கேட்புரையில் கலந்துகொண்ட திரு. S.K. சிவக்குமார், உதவி செயற்பொறியாளர்/சமயநல்லூர் அவர்கள் மின்சார டிரான்ஸ்பார்மர் அமைப்பதற்காக நடப்பட்டுள்ள இரண்டு கம்பங்களில் வடக்கு புறமாக உள்ள கம்பத்தை ஏற்கனவே உள்ள அடுத்த கம்பத்திற்கு தெற்கு புறமாக அமைக்க முடியும் என்று தெரிவித்துள்ளார்.

9.3 மேல்முறையீட்டாளரும் நடப்பட்டுள்ள இரண்டு மின்கம்பங்களில் மேற்கண்ட வடக்கு புறமாக நடப்பட்டுள்ள கம்பத்தை மட்டும் மாற்றி ஏற்கனவே தெற்குபுறமாக நடப்பட்டுள்ள கம்பத்திற்கு தெற்குபுறமாக அமைப்பது தனக்கு ஏற்புடையது என்று கேட்புரை நாளில் தெரிவித்துள்ளார்.

9.4 எனவே, இருதரப்பினரும் ஏற்கனவே டிரான்ஸ்பார்மர் அமைப்பதற்காக நடப்பட்டுள்ள இரண்டு கம்பங்களில் வடக்குபுறமாக நடப்பட்டுள்ள கம்பத்தை தெற்குபுறம் மாற்றி அமைத்து மின்சார டிரான்ஸ்பார்மரை அமைக்க சம்மதம் தெரிவித்துள்ளதால் அவ்வாறு மின்கம்பத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10. <u>முடிவுரை</u>**

10.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரின் பிரதிநிதி அவர்களும் 21.9.2016 ல் நடந்த கேட்புரையில் மின்சார டிரான்ஸ்பார்மர் அமைப்பதற்காக நடப்பட்டுள்ள இரண்டு கம்பங்களில் வடக்குபுறமாக உள்ள கம்பத்தை தெற்கு புறமாக உள்ள கம்பத்திற்கு தெற்கில் அமைக்க சம்மதம் தெரிவித்துள்ளதால் எதிர்மனுதாரர் வடக்கு புறமாக நடப்பட்டுள்ள கம்பத்தை தெற்குபுறத்தில் மாற்றி அமைத்து மின்சார டிரான்ஸ்பார்மரை அமைக்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

10.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.42/2016 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. N. அனந்தசயனம், M.A., B.L.,
அட்வகேட்,
தேனூர்,
சமயநல்லூர் (வழி) ,
மதுரை மாவட்டம் – 625 402.

2) செயற்பொறியாளர் / பகிர்மானம்,
சமயநல்லூர்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மின்வாரிய வளாகம்,
திண்டுக்கல் மெயின் ரோடு, சமயநல்லூர் – 625 402.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே. புதூர், மதுரை – 625 007.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.